


திருவாரூரில் நடைபெற்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் விவசாய விரோத நடவடிக்கைகளுக்கு எதிரான கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ.கண்டன உரையாற்றினார். முன்னாள் அமைச்சர் மாநில விவசாய தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், மாவட்ட செயலாளர்கள் கௌதமன் , நிவேதா முருகன், நாடாளுமன்ற உறுப்பினர் வை.செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் கே.மாரிமுத்து, விவசாய அணி மாவட்ட அமைப்பாளர் வீரா தேசபந்து, விவசாய தொழிலாளர் அணி அமைப்பளர் க. அன்பழகன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி நிர்வாகிகள், கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

### கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளர்

# திருமதி இராஜம் ஜான் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ. 26-

கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளர் திருமதி இராஜம் ஜான் அவர்கள் மறைவு செய்தி அறிந்து, முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

“கழகம் நடத்திய மதுரை சமூக நீதி மாநாட்டிலும், சேலம் மாநாட்டிலும், நெல்லை மாநாட்டிலும் அதிக மகளிர் கலந்து கொள்ளச் செய்தமைக்காக என் தங்கத் தலைவர் கையாலும் - எங்கள் தளபதியார் கையாலும் கேடயம் பெற்றதை எனது பேறாகக் கருதுகிறேன்” என்று அகமகிழ்வுடன் கூறிய கழக மாநில மகளிர் அணி முன்னாள் செயலாளர் திருமதி இராஜம் ஜான் அவர்கள் நேற்று மறைவெய்தினார் என்ற செய்தி அறிந்து மிகவும் வருந்தினேன்.

திருநெல்வேலி மாவட்டம், விக்கிரம சிங்க புரம் பகுதியில் பல இடங்களில் மகளிர் அமைப்புகளை நிறுவி, மகளிர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் துணிவோடு போராடியதோடு, கழகப் பணியிலும் தீவிரமாக ஈடுபட்டு வந்தவர்.

கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றவர். இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம், விலைவாசி உயர்வுப் போராட்டம், இரயில் மறியல் போராட் டத்திலும், இராணிமேரிக் கல்லூரியை இடிக்க அ.தி.மு.க. ஆட்சியினர் முயன்ற போது, மாணவியர்க்கு ஆதரவாக இருந்த என்னை கைது செய்ததை எதிர்த்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.


இவரது கழகப் பணியினைப் பாராட்டிச் சிறப்பிக்கும் வகையில் தலைமைக் கழகத்தின் சார்பில், 20.09.2010 அன்று நாகர்கோவிலில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு தலைவர் கலைஞர் அவர்கள் பாவேந்தர் பாரதிதாசன் விருதினை வழங்கிச் சிறப்பித்தார். இவரது இழப்பு கழகத்திற்கு மாபெரும் இழப்பாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தினருக்கும், நெல்லை மாவட்ட, மாநகரக் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# நாகை மாவட்டத்தில் நவ.27ம் தேதி இளைஞர் எழுச்சி நாள் விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் அறிக்கை!



நாகை, நவ.26 –

நாகை மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம். நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஒற்றை செங்கல்லால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்து ஒன்றிய அரசை அதிர வைத்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின்நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்பு தேர்தல் களில் கிராமம் கிராமமாக சென்று தேர்தல் பணியாற்றியும், கழக நிகழ்ச்சிகள் கழகத்தினர் இல்ல நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் என தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப் பயணம் செய்து உழைப்பால் உயர்ந்த சின்னவர் அவர்கள் பிறந்த நாளான வரும் 27.11.2024 அன்றும், மாதம் முழுவதும் நாகை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், எழை எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதியவர்களுக்கு புத்தாடை, உணவு வழங்கியும், மரக்கன்றுகள் நட்டும், வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியம், மருத்துவ முகம், இரத்த தான முகாம், இலவச கண்சிகிச்சை முகாம் நடத்தி சின்னவர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும் பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் சார்பு அணிகளி நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள் அனைவரும் கலந்து கொண்டு துணை முதல்வர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும் விழா ஏற்பாடுகளை மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள். ஒன்றிய நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என். கௌதமன் கூறியுள்ளார்.

### இளைஞர் எழுச்சி நாள்: கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும்,

# மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக் கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கல்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



வருகின்ற (27.11.2025 வியாழக்கிழமை) அன்று இளைஞர் எழுச்சி நாள் முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வார்டு, கிளைக்கழகங்கள் தோறும் நலத்திட்ட உதவிகள், உணவு வழங்கல், மரக்கன்றுகள் நடுதல், பள்ளி மாணவர்களுக்கு பள்ளி உபகரணங்கள் வழுங்குதல், இரத்த தானம், மருத்துவ முகாம் நடத்துதல், விளையாட்டு போட்டிகள் நடுத்தி மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்டங்கள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும்.

அதுசமயம், இந்நிகழ்ச்சிகள் நடைபெறும் இடங்களில் கடலூர் கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், முன்னாள் ஒன்றிய குழுத்தலைவர்கள், முன்னாள் மாவட்ட ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மாநகர மேயர், நகர மன்ற தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், மண்டலக் குழுத் தலைவர்கள், மாநகர, நகர, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவ அணி, வர்ததகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, சுற்றுச்சூழல் அணி, அமைப்பு சாரா தொழிலாளர் அணி,, அயலக அணி, தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்,**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

### மயிலாடுதுறை மாவட்டத்தில்

# நவ. 27ல் இளைஞர் எழுச்சி நாள் விழா !

## மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் அறிக்கை!



மயிலாடுதுறை, நவ.26–

மயிலாடுதுறை மாவட்டத்தில் துணை முதல்வர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவோம். மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளரும் பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடைபெற்ற நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சி அமைப்பு தேர்தல்களில் கிராமம் கிராமமாக சென்று தேர்தல் பணியாற்றியும், கழக நிகழ்ச்சிகள் கழகத்தினர் இல்ல நிகழ்ச்சிகள், பொதுக் கூட்டங்கள் ஆர்ப்பாட்டங்கள் என தமிழ்நாடு முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து உழைப்பால் உயர்ந்த சின்னவர் அவர்கள்

ஒற்றை செங்கல்லால் ஒன்றிய அரசின் முகமூடியை கிழித்து ஒன்றிய அரசை அதிர வைத்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர். இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான வரும் 27.11.2024 அன்றும், மாதம் முழுவதும் மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டுகள் தோறும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், எழை எளியவர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கியும், ஆதரவற்ற இல்லங்களில் உள்ள குழந்தைகள், முதியவர்களுக்கு புத்தாடை உணவு வழங்கியும் மரக்கன்றுகள் நட்டும். வழங்கியும், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு நோட்டு, பேனா உள்ளிட்ட எழுது பொருட்கள் வழங்கியும், மருத்துவ முகாம், இரத்த தான முகாம், இலவச கண்சிகிச்சை முகாம் நடத்தி சின்னவர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும் பிறந்த நாள் நிகழ்ச்சியில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் சட்ட மன்ற முன்னாள். இந்நாள் உறுப்பினர்கள் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் அனைவரும் கலந்து கொண்டு துணை முதல்வர் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என்றும் விழா ஏற்பாடுகளை மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கிளை, வார்டு கழக நிர்வாகிகள் செய்திட வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ கூறியுள்ளார்.

### தருமபுரி கிழக்கு மாவட்டத்தில்

# கருப்பு சிவப்பு வெற்றி பெற களப்பணியில் இறங்கிடுவீர்!

## மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. பேச்சு!



தருமபுரி, நவ. 26–

தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. அலுவலக தளபதி அரங்கத்தில் வருகின்ற நவ 27 ஆம் தேதி இளைஞர் எழுச்சி நாள், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணியினருடன் ஆலோசனை கூட்டம் தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் ஆ.மணி எம்.பி. பேசியபோது:

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இளைஞர் அணியின் சார்பில் கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு ஊராட்சிகள் தோறும் எளியோர் பயன்படும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் கழக கொடி ஏற்றுதல்,பள்ளி கல்வி உபகரணங்கள் வழங்குதல்,விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் உள்ளிட்ட ஆக்க பணிகளை மேற்கொள்ள வேண்டும், இளைஞர் எழுச்சி நாளான நவ 27 முதல் நாம் வரவிருக்கும் 2026 தேர்தலுக்கு நம்மை தயார்படுத்தி கொள்ள வேண்டும்,ஒவ்வொருவரும் ஓய்வின்றி உழைத்திட வேண்டும்,கழக ஆக்க பணிகளுக்காக இளைஞர் அணியினருக்கான அனைத்து உதவிகளையும் நான் செய்ய தயாராக உள்ளேன்.வரவிருக்கும் தேர்தலில் தருமபுரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட 3 சட்டமன்ற தொகுதிகளிலும் நாம் வென்று அந்த வெற்றியினை கழகதலைவர் முதலமைச்சர் மற்றும் துணை முதலமைச்சர், மாநில இளைஞர் அணி செயலாளர் நமது சின்னவர் ஆகியோரிடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்,7 ஆவது முறையாக கழகம் ஆட்சி அமைக்க வேண்டும்,என் உடல்நலத்தை பற்றி நான் கவலைப்படவில்லை,என் உயிர் முக்கியம் இல்லை கருப்பு சிவப்பு வெல்ல வேண்டும் என்பது மட்டும் தான் எனக்கு முக்கியம்,எனவே கழகபணிக்கு எந்த நேரத்திலும் என்னை நீங்கள் அழைக்கலாம் இளைஞர் அணியினருடன் இணைந்து உழைக்க நான் தயாராக இருக்கிறேன் என்று அவர் பேசினார். கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.ஜி.எஸ்.வெங்கடேஸ்வரன்,துணை அமைப்பாளர்கள் சோக்குமார், கே.ஆர்.சி.செல்வராஜ்,ராஜகோபால்,கோடீஸ்வரன்,முத்தமிழன்,கலைசெல்வன்,தங்கதமிழ்செல்வன்,மற்றும் ஒன்றிய இளைஞர் அணியினர் கலந்து கொண்டனர்.

### இரா.இரத்தினகிரி மறைவு: சென்னை அண்ணா அறிவாலயத்தில்

# “கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டைப் பெற்றவர் இரா.இரத்தினகிரி!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



சென்னை, நவ.26-

தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் திராவிட இயக்கத்தின் தீவிரப் பற்றாளருமான இரா.இரத்தினகிரி அவர்களின் மறைவுச் செய்தியறிந்ததும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், “தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றை விவரிக்கும் “கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பாராட்டைப் பெற்றவர்” என்று குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

**தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், திராவிட இயக்கத்தின் தீவிரப் பற்றாளருமான இரா.இரத்தினகிரி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்தினேன்.**

**தமிழ்நாடு கால்நடை ஆய்வாளர் சங்கத்தின் தலைவராகச் சுமார் 20 ஆண்டுகாலம் பணியாற்றிய திரு. இரத்தினகிரி அவர்கள், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டக் குழுவின் உறுப்பினர், பால்வளத்துறை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சித் துறைகளின் ஆலோசகராகவும் இருந்துள்ளார். மகாராஷ்டிரா மாநிலம் புனேவில் உள்ள அகில இந்திய கால்நடை மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் செயலாளராகவும் 18 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.**

**இவை மட்டுமின்றி, தி.மு.க. தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் திராவிட இயக்க வரலாற்றை விவரிக்கும் ”கலைஞர் கருவூலம்” காட்சியகத்தை அமைத்து, முத்தமிழறிஞர் கலைஞரின் பாராட்டைப் பெற்றவர். 1976 முதல் இன்றளவும் திராவிடர் கழகம் வெளியிட்டு வரும் பெரியார் நாட்குறிப்பையும் இரத்தினகிரி அவர்கள் வெளியிட்டுள்ளார். ‘பெரியார் இயக்கம்’ மாத இதழின் ஆசிரியராகவும் இருந்துள்ளார்.**

**உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இரத்தினகிரி அவர்களை, அண்மையில் நான் தஞ்சை சென்றிருந்தபோது நலம் விசாரித்ததை நினைவு கூர்கிறேன்.**

**ஈடுபட்ட அத்தனை பணிகளிலும் முழுமையான ஆர்வத்தையும் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்திச் செயல்பட்ட இரத்தினகிரி அவர்களை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தார், நண்பர்கள், திராவிட இயக்கப் பற்றாளர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### கழக சட்டதிட்ட விதி:18, 19-ன் படி,

# தி.மு.க. தேர்தல் பணிக்குழு துணைத் தலைவர் நியமனம்

## தலைமைக் கழக அறிவிப்பு!

*கழக சட்டதிட்ட விதி:18, 19ன் படி, தி.மு.க. தேர்தல் பணிக்குழு துணைத் தலைவராக திரு.***கே.பி.சாமி***, (1/500, கள்ளியம்புதூர், விஜயமங்கலம், ஈரோடு 638 056. ) அவர்கள் தலைமைக் கழகத்தால் நியமிக்கப்படுகிறார்.*

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 600 018,
நாள் : 24.11.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

# தி.மு.க. மருத்துவ அணி

## மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் & மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம்

தி.மு.க. மருத்துவ அணி

### மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ. அறிவிப்பு

கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் **26.11.2025** புதன்கிழமை காலை **10.00** மணி அளவில், சென்னையில் உள்ள **ஹோட்டல் அக்கார்ட்டில்** (கோபதி நாராயணா சாலை, தியாகராயர் நகர், சென்னை) மருத்துவ அணி மாநிலத் தலைவர் **மருத்துவர் கனிமொழி என்.வி.என். சோமு எம்.பி.** அவர்களின் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக மருத்துவ அணியின் மாநில நிர்வாகிகள், மாவட்டத் தலைவர்கள் மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

பொருள் : **கழக ஆக்கப் பணிகள்**

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : **22.11.2025**

**மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ.**
செயலாளர்
தி.மு.க. மருத்துவ அணி